www.agaram.lk

සියලුම හිමිකම් ඇවිරිණි]
(முழுப்பதிப்புரிமையுடையது)
All rights Reserved]

# முதலாந் தவணைப் பரீட்சை – மார்ச் 2017

தரம் 11

அக்கரைப்பற்று வலய அதிபர்கள் சங்கம்
அக்கரைப்பற்று

புள்ளி

சுட்டெண்: .........................

## தமிழ் மொழியும் இலக்கியமும் – I

நேரம் : 1.00 மணித்தியாலம்

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- ***1 - 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.***

♦ **பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்திற் காணப்படும் சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01. “சூழ மேதியிறங்குந் துறையிற் ....” இங்கு **மேதி** என்பது,
(1) ஆடு (2) மாடு (3) பசு (4) எருது

02. “கொற்றத்தார்க் குரிசில்...” இங்கு **குரிசில்** என்பது,
(1) மாலை (2) வெற்றி (3) தலைவன் (4) சிறப்பு

03. “சுற்றத்தார் தேவரொடுந் தொழாநின்ற....” **சுற்றத்தார்** என்பதன் எதிர்ப்பதம்
(1) உறவினர்கள் (2) பகைவர்கள் (3) சுற்றியிருப்போர் (4) பெற்றோர்

04. “........................... மனத்தேயிடித்து முழங்கி மின்னிப்............” இங்கு **மின்னி** என்பதன் எதிர்க்கருத்து,
(1) பிரகாசித்து (2) மறைந்து (3) ஒளிர்ந்து (4) எரிந்து

05. “முற்றத்தான் முதற்றேவி மூன்றுலகு ........” இங்கு தேவி என்பதன் எதிர்ப்பாற்சொல்
(1) தேவன் (2) தேவர் (3) தேவு (4) தேவன்

♦ **பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

06. “இந்த பைல் இஞ்ச எப்பிடி வந்தது?” இங்கு பைல் என்பதற்கான தமிழ்ச்சொல்
(1) கோர்வை (2) தொகுப்பு (3) கோப்பு (4) உறை

07. கூட்டத்தைக் குறிக்கும் சொற்களுள் பொருத்தமானது
(1) கரும்பு - கொல்லை (2) தேயிலை - செடி (3) காடு - முல்லை (4) மரம் - தோப்பு

08. இலட்சங்கோடி அளவுடைய நிதி,
(1) பதுமநிதி (2) சங்கநிதி (3) களஞ்சியம் (4) நிந்தகம்

09. மேகம், ஆபரணம், அழகு என்னும் பல பொருள்களைக் குறிக்கும் ஒரு சொல்,
(1) மஞ்சு (2) ஒளி (3) காட்சி (4) எழில்

10. புலியின் ஆண் போத்து என்பது போல அதன் பெண்ணைக் குறிக்கும் சொல்
(1) களிறு (2) பிணை (3) பெடை (4) பிணா



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

11. 'நாக்குப் புரட்டுதல்' என்பதைக் குறிக்கும் மரபுத்தொடர்
    (1) பழித்தல் (2) எதிர்த்துப் பேசுதல்
    (3) செருக்குக் கொள்ளல் (4) வார்த்தை தவறுதல்

12. "அடி விளக்குதல்" என் மரபுத்தொடரின் பொருள்
    (1) அவதானித்தல் (2) தன் மரமைப் புகழ் பெறச் செய்தல்
    (3) வெற்றி கொள்ளல் (4) இடம் பெயர்தல்

13. உலக நடையறிந்து ஒழுகுதல்,
    (1) சிரஞ்சீவி (2) நிந்தகம் (3) ஒப்புரவு (4) மாராயம்

14. அடிதோறும் செய்யுட் சீர்களின் முதலாவது எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது,
    (1) எதுகை (2) மோனை (3) மடக்கு (4) சிலேடை

15. தேடிய பொருள் இலகுவில் கிடைப்பதைக் குறிக்கப் பொருத்தமான உவமைத்தொடர்,
    (1) அக்கினியில் பட்ட மெழுகு போல (2) வலையில் சிக்கிய மான்போல
    (3) கரடி கார்த்திகைப் பிறை கண்டது போல (4) தேடிய பூண்டு காலில் அகப்பட்டது போல

16. 'நேரம் வந்தால் காரியம் உடனே நடைபெறும்' என்பதைக் குறிப்பதற்குப் பொருத்தமான பழமொழி
    (1) அச்சமில்லாதவன் அம்பலம் ஏறுவான் (2) அடாது செய்தவன் படாது படுவான்
    (3) கனிந்த பழம் தானே விழும். (4) அன்று எழுதினவன் அழித்து எழுதுவான்

17. பின்வருவனவற்றுள் வேறுபட்ட பொருளைத் தரும் பழமொழி,
    (1) அக்கரைக்கு இக்கரை பச்சை (2) அலை மோதும் போதே தலை முழுகு.
    (3) அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வராது. (4) கண்கெட்ட பின்னர் சூரிய வணக்கம்

18. 'உணர்வொழிகாலம்' என்ற அருஞ்சொற்றொடர் குறிக்கும் பொருள்
    (1) குழந்தைப் பருவம் (2) இளமைப்பருவம் (3) வயோதிப காலம் (4) அறிவு பெருகிய காலம்

agaram.lk

19. பின்வருவனவற்றுள் இணைமொழியாக அமைந்த சொல்,
    (1) பென்னம் பெரிய (2) கலகல (3) கரிய கரிய (4) குற்றம் குறை

20. 'வயல் நிலம் பச்சைப் பசேல் எனக் காட்சியளித்தது" இத்தொடரில் பச்சைப் பசேல் என்பது,
    (1) அடுக்குத் தொடர் (2) இரட்டைக் கிளவி (3) அடுக்கிடுக்குத் தொடர் (4) இணைமொழி

♦ **பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.**

21. புறச்சுட்டாக அமைந்த சொல்,
    (1) அப்புத்தகம் (2) அது (3) அவை (4) இவன்

22. 'குகனும் இராமனும் படகில் ஏறினர்.' இவ்வாக்கியம்,
    (1) ஏவல் (2) கூட்டு (3) கலப்பு (4) மெய்ப்பாடு

23. 'நுளம்பார் பேசினார்' இது எவ்வகை வழுவமைதி.
    (1) எண்வழுவமைதி (2) இடவழுவமைதி (3) கால வழுவமைதி (4) திணைவழுவமைதி

Agaram.LK - Keep your dreams alive!

24. 'வேனிலான்' என்பதப் பிரித்தெழுதினால்,
(1) வேன் + இல் + ஆன் (2) வேனில் + ஆன் (3) வே + ஆன் (4) வே + இல் + ஆன்

25. பின்வருவனவற்றுள் கிரந்த எழுத்து,
(1) ஐ, ஔ (2) ஔ, ∴ (3) ங, ஞ (4) ஸ, ஹ

26. இனஎழுத்து இல்லாத சொற்றொகுதி
(1) இடையினம் (2) சந்தியக்கரம் (3) மெல்லினம் (4) வல்லினம்

27. 'படித்த மாணவர்கள் பரீட்சை எழுதினார்கள்' இங்கு படித்த என்பது,
(1) வினையெச்சம் (2) பெயரெச்சம் (3) வினைமுற்று (4) பெயர்ச்சொல்

28. 'அவன் நல்லவன்' - இதில் நல்லவன் என்பது,
(1) தெரிநிலை வினைமுற்று (2) வியங்கோள் வினைமுற்று
(3) குறிப்பு வினைமுற்று (4) ஏவல் வினைமுற்று

- **29, 30 ஆகிய வினாக்களில் பொருத்தமற்ற உதாரணம் இடம்பெற்ற சொற்றொகுதியைத் தெரிவு செய்க.**

29. (1) வினைமுற்று:- படித்தான், எழுதினான், பேசினான்
(2) வியங்கோள் வினை:- வாழ்க, ஓங்கட்டும், வாழிய
(3) பிறவினை:- காண்பித்தான், எழுதுவித்தான், நடப்பித்தான்
(4) ஏவல் வினை:- படி, ஒழிக, செல்

30. (1) இயல்புப் புணர்ச்சி: மண்வெட்டி, கடலலை, சரிபாதி
(2) தோன்றல் விகாரப் புணர்ச்சி:- பொற்குடம், கல்விக்கடல், சாலப் பொருத்தம்
(3) திரிதல் விகாரப் புணர்ச்சி:- பற்பொடி, கற்குவியல், விற்போர்
(4) கெடுதல் விகாரப் புணர்ச்சி:- மரவேர், வட்டநிலா, வானக்கடல்

- **பின்வரும் வாக்கியங்களில் புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

31. நீ ஒரு போதும் ஆலயத்துக்குச் ....................................
(1) செல்ல வேண்டும் (2) சென்றீர் (3) செல்லவில்லை (4) சென்றிருந்தீர்

32. அரச பொதுப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடும் தினம் திட்டமிட்டு .......................... வெளியிடப்பட்டுள்ளது.
(1) நீதிபதியால் (2) ஆணையாளரால் (3) கல்வி அமைச்சால் (4) அதிபரால்

33. உள்நாட்டு நெல்லுக்கான ............................ விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
(1) கட்டுப்பாட்டு விலை (2) கறுப்பு விலை (3) உற்பத்தி விலை (4) நிரந்தரமற்ற விலை

34. அரசன் உழுந்தருளும் போது அவனது விருதுப் பெயர், வெற்றி முதலியவற்றைக் கூறல் ............................ எனப்படும்
(1) கப்பம் (2) கட்டியம் (3) ஒற்றி (4) ஒப்புரவு



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

35. கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த ஒவ்வொரு பொருளும் ..............................
(1) அழகானவைகளாகும் (2) அழகாயிருந்தது
(3) அழகானவை (4) அழகுமிக்கவைகளாகும்

36. நடிகர் குழு ..............................
(1) மேடையேறினர் (2) மேடையேறினார்கள் (3) மேடையேறியது (4) மேடையேறின.

- **தரப்பட்ட பாடலை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

நெற்றியில் நீர் சொரிய - உழவர்
நிலம் உழுத பின்பும்
வற்றிய குட்டை கண்டால் - உடனே
மாமழை பெய்திடுவாய்

வாரிப் பொருளையெலாம் - நன்கு
வழங்கி நிற்போரை
மாரிபோலப் பொழிவோர் - என்றே
வாழ்த்தும் மனித குலம்

37. இப்பாடலினூடாக கவிஞர் சொல்ல வந்த கருத்து யாது?
(1) மழை அவசியமில்லை (2) உழவுத் தொழில் (3) மழையின் சிறப்பு (4) கொடை வழங்காமை

38. இப்பாடலில் இடம்பெறும் அணி
(1) உவமை அணி (2) உருவக அணி (3) உயர்வு நவிற்சி அணி (4) தற்குறிப்பேற்ற அணி

39. இப்பாடலின் கருத்துக்குப் பொருந்தாத கூற்றைத் தெரிவு செய்க.
(1) உழவருக்கும் மழைக்கும் தொடர்பில்லை
(2) உழவருக்கு இறையருள் கிடைக்கிறது.
(3) மாரிபோல மனிதகுலம் வாழ வேண்டும்
(4) தேவை அறிந்து மக்களுக்கு பொருள் வழங்க வேண்டும்.

40. கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக் கோப்பான பந்தியொன்று அமையும். அவ்வாறு பந்தியை அமைப்பதற்கு மிகப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.
அ) மனித விழுமியங்கள் சேர்க்கப்படாத அறிவு பயனற்றது.
ஆ) அது அறிவியல் சார்ந்தது.
இ) அதாவது அறப்பண்புகளின் அடிப்படையில் எழுகின்ற மனித விழுமியங்கள் சார்ந்தது.
ஈ) அறிவுக்கு இன்னொரு பக்கமும் உண்டு என்பதையும் உணர்ந்து கொள்ளல் வேண்டும்.
உ) அறிவியல் என்பது அறிவு என்னும் நாணயத்தின் ஒரு பக்கம் மட்டுமே
(1) அ, இ, ஆ, உ, ஈ (2) உ, ஈ, ஆ, இ, அ (3) ஈ, ஆ, உ, இ, அ (4) உ, இ, ஆ, அ, ஈ

(40 x 1 = 40 புள்ளிகள்)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

සියලුම හිමිකම් ඇවිරිණි]
(முழுப்பதிப்புரிமையுடையது)
All rights Reserved]

# முதலாந் தவணைப் பரீட்சை – மார்ச் 2017

தரம் 11

அக்கரைப்பற்று வலய அதிபர்கள் சங்கம்
அக்கரைப்பற்று

புள்ளி

சுட்டெண்: ........................

## தமிழ் மொழியும் இலக்கியமும் – II

நேரம் : 2.00 மணித்தியாலம்

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01. சுருக்கமான விடை எழுதுக.

i) பின்வரும் தொடரைச் சந்தி பிரித்து எழுதுக.
"துன்பம் பிறர்க்கு; நல்லின்பம் தமக்கெனும் துட்ட மனோபாவம்"

ii) உடை என்ற சொல் பெயராகவும் வினையாகவும் வரத்தக்கதாகத் தனித்தனி வாக்கியங்கள் எழுதுக.

iii) பாராளுமன்றத்தில் பஜற் (Budjet) கால்கோளாயிற்று.
அ) பஜற் (Budjet) என்பதன் தமிழ்ச் சொல்லைக் குறிப்பிடுக.
ஆ) 'கால்கோளாயிற்று' என்ற மரபுத் தொடரின் பொருள் யாது?

iv) பின்வரும் பேச்சு வழக்குத் தொடரை எழுத்து வழக்குத் தொடராக மாற்றி எழுதுக.
"நீ கோவிக்கிறது சரியடா மோனே!"

v) "அவன் வீடு கட்டினான்" இதனைப் பிறவினை வாக்கியமாக மாற்றி எழுதுக.

vi) 'பிரசித்தி' என்ற சொல்லின் கருத்துப் புலப்படுமாறு அச்சொல்லை ஒரு வாக்கியத்தில் அமைத்துக் காட்டுக.

vii) புலவர் தெய்வீகமானவர்.
புலவரால் நாட்டைக் காக்கவும் அழிக்கவும் முடியும்.
இவ்விரு வாக்கியங்களையும் இணைத்து கூட்டு வாக்கியமாக்குக.

viii) பின்வரும் வாக்கியத்தின் எழுவாய், பயனிலையைக் குறிப்பிடுக.
"வீண் பொழுதுபோக்கால் நாம் எதனையும் சாதிக்க முடியாது.

ix) துண்டுப்பிரசுரத்தினால் கிடைக்கும் நன்மைகள் இரண்டைக் குறிப்பிடுக.

x) பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.
அ) முள் + புதர்
ஆ) கரும்பு + சாறு (10x 2 = 20 புள்ளிகள்)

02. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்துக்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.

அ) நவீன தொலைத்தொடர்பு சாதனங்கள் பல்வேறு விதத்தில் நன்மையைத் தந்து கொண்டிருந்த போதிலும், சிறியோர் முதல் பெரியோர் வரை சமய சமூக கலாசார சீரழிவுகளுக்கும் வித்திடவும் உதவுகின்றது. அதனால் மக்கள் பெரும் சவால்களை எதிர்நோக்குகின்றனர். இவ்வாறான விடயங்களை கருத்திற் கொண்டு இதற்கான காரணங்களையும் அதனை நிவர்த்திப்பதற்கான வழிமுறையையும் உள்ளடக்கி ஒரு **விளக்கக் கட்டுரை.**

ஆ) இயற்கைச் செல்வங்களுள் நீர் பிரதானமானது. அது தற்பொழுது குறைந்து வருகின்றது. பணப் பொருளாதாரமாக மாறியுள்ளது. இதற்கெல்லாம் பிரதானமான காரணம் காடழிப்பாகும். இதனால் மழை குறைவடைந்து இயற்கைச் சமனிலை பாதிப்படைகிறது. அதனைத் தவிர்ப்பதற்கு நாம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கையை விளக்குவதாய் அமையும் ஓர் **மேடைப் பேச்சு**

இ) கல்வி மேம்பாட்டிற்கு இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் அவசியம் எனக்கூறும் ஒருவருக்கும் அதனை எதிர்க்கும் மற்றொருவருக்குமிடையிலான **உரையாடல்.**



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

ஈ) கமலா பிறப்பிலே ஊனமுற்றவள். ஆனாலும் அவள் சக மாணவர்களைப் போன்று கல்வி கற்று, சமூகத்திற்கு சேவை செய்ய வேண்டும் என ஆசைப்படுகிறாள். அதன் நிமித்தம் மாற்றுத் திறனாளிகள் கல்வி கற்கும் பாடசாலையில் பெற்றோரின் உதவியோடு சேரந்து கற்று இறுதியில் உயர்பதவியை அடைந்து சிறந்த சமூக சேவை செய்கிறாள் என்பதைக் கருவாகக் கொண்ட **சிறுகதை.** (25 புள்ளிகள்)

03. கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை **40 - 45** சொற்களில் அமையுமாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.)

புத்தகங்களை படிக்கும் பழக்கம் உள்ளவர்கள் ஒருபோதும் தனிமை உணர்வைப் பெறுவதில்லை. ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் அவர்கள் புத்தகங்களை நாடிச் சென்று விடுவதே இதற்குக் காரணமாகும். வாழ்க்கையில் ஏற்படும் சோர்வுகளை தோல்விகளை அவர்கள் விரும்பிய நூல்களை வாசித்து அவற்றின் மூலம் போக்கிக் கொள்வர்.

நூல்கள் நமக்கு அறிவு தரும் அரிய செல்வங்கள் வேறு செல்வங்களைக் கள்வர்கள் களவாடிச் சென்று விடலாம். ஆனால் புத்தகங்கள் அறிவுச் செல்வத்தை நம்மிடமிருந்து எவருமே கவர்ந்திட முடியாது. இதனாற்றான் 'புத்தகங்களைப் போன்ற சிறந்த கருவூலம் எதுவும் மனிதனுக்கு இருக்க முடியாது' என்றார் ஆங்கில கவிஞர் ரஸ்கின். புத்தகங்களால் ஒருவன் பெறும் அறிவை, இன்பத்தை மற்றவர்கள் தட்டிப் பறித்திட முடியாது. வாழ்நாள் முழுவதும் அவை அவனுக்குப் பயன்தரும். நூல்கள் படிக்கின்ற பழக்கம் இல்லாதவனின் வாழ்க்கை சூனியமாகவே போகும். கிணற்றுத் தவளை போன்றே அவன் கருதப்படுவான். (10 புள்ளிகள்)

04. பின்வரும் உரைநடைப் பகுதியை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

சாதாரணமாக ஒரு விளம்பரத்தின் வாசகங்கள் நுகர்வோரின் கவனம், ஆர்வம் மற்றும் விருப்பங்களைத் தூண்டி பொருளை வாங்கச் செய்திட்டால் போதும் என அநேகமாக எல்லா விளம்பரதாரர்களும் எண்ணுகின்றனர். இதற்கு முன் நாம் ஒரு செய்தியை அறிந்து கொள்ள வேண்டும். விற்பனைக்கு உள்ள தயாரிப்பைப் பற்றி நுகர்வோர் இவ்விளம்பரத்தின் மூலமே அறிந்து கொள்ள முடிகிறது.

ஆகவே, விளம்பரம் தமது தயாரிப்பைப் பற்றிய உண்மை விவரங்களைச் சொல்ல வேண்டும். அந்தத் தயாரிப்பும் விளம்பரத்தில் கூறிய படி நுகர்வோரின் ஏதாவது ஒரு தேவையையாவது பூர்த்தி செய்வதாக இருக்க வேண்டும். அவ்வாறு இல்லையெனில், விளம்பரம் எவ்வளவு திறனுடன் பலரையும் கவரும் விதத்தில் படைக்கப்பட்டிருந்தாலும் தயாரிப்பு நிராகரிக்கப்பட்டு விடும் என்பது நிதர்சன உண்மை.

படைப்பு என்பது ஒரு கலை. ஒரு கலைஞன், எழுத்தாளன், கவிஞன், கதாசிரியன் அல்லது நாடகாசிரியன் ஆகியோர் பிரபலமான கருத்துக்கள், வார்த்தைகள், சொற்றொடர்கள் போன்றவற்றைப் புதியதொரு சூழ்நிலையில் அளிப்பது போல், விளம்பர எழுத்தாளர் அடிக்கடி பெரும்பான்மையான நுகர்வோரைக் கவரும் வகையில் ஒரு விளம்பர வாசகத்தை மிகவும் கவனத்துடனும் புத்திசாலித்தனத்துடனும் உருவாக்குகிறார். ஏனைய படைப்புகள், இலக்கியச் சுவையும், வார்த்தை ஜாலங்களும் அமைந்தால் வெற்றி பெற்றுவிடும். ஆனால் விளம்பரப் படைப்போ, தமது தயாரிப்பை நுகர்வோர் விருப்பப்படி செய்திட வேண்டிய சூழ்நிலையில் படைக்கப்பட வேண்டும்.

அ) விளம்பத்தின் நோக்கம் யாது?
ஆ) விளம்பரம் கவர்ச்சியாக இருந்த போதிலும் தயாரிப்பு நிராகரிக்கப்படுவதற்கான காரணம் யாது?
இ) விளம்பரத்துக்கும் ஏனைய படைப்புக்கும் உள்ள வேறுபாடு யாது?
ஈ) 'சிகிச்சை அளித்ததில் வெற்றி; ஆனால் நோயாளி இறந்துவிட்டார்.' இத்தொடரில் குறிப்பிடப்படும் விடயம் யாது?
உ) விளம்பரத்தில் இடம் பெறவேண்டிய இரண்டு பண்புகளைக் குறிப்பிடுக. (10 புள்ளிகள்)

05. உமது பிரதேசத்தில் அதி வேகமாக தொற்று நோய்கள் பரவி வருவதனால் அதனைக் கட்டுப்படுத்த உதவுமாறு பிரதேச சுகாதாரப் பரிசோதகருக்கு 100 சொற்களில் ஒரு கடிதம் எழுதுக.

**அல்லது**

உமது பாடசாலையில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியை செயலாளர் என்ற முறையில் அறிக்கைப்படுத்துக. (100 சொற்களில்) (15 புள்ளிகள்)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

සියලුම හිමිකම් ඇවිරිණි]
(முழுப்பதிப்புரிமையுடையது)
All rights Reserved]

# முதலாந் தவணைப் பரீட்சை – மார்ச் 2017

தரம் 11

அக்கரைப்பற்று வலய அதிபர்கள் சங்கம்
அக்கரைப்பற்று

புள்ளி

சுட்டெண்: .........................

## தமிழ் மொழியும் இலக்கியமும் – III

நேரம் : 2.00 மணித்தியாலம்

**கவனிக்க வேண்டியவை:**
- **அறிவுறுத்தலுக்கேற்ப ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**
- **1, 2, 3, 4 ஆகிய வினாக்களுக்கும் 5, 6, 7ஆம் வினாக்களில் யாதேனும் ஒருவினாவுக்கும் விடை எழுதுக.**

01. பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை எழுதுக.

i) "…. பண்டே பழகியிருந்தாலும் அறியார்
புல்லர் நல்லோரை…."

அ) இப்பாடலடியைக் கொண்டு கூட்டி எழுதுக.

ஆ) இங்கு புல்லர் எனக் குறிப்பிடப்படுபவர் யார்?

ii) 'உப்பில்லாக் கஞ்சியினை யுண்ணு மறுசுவை போல் …'

அ) இப்பாடலை எழுதியவர் யார்?

ஆ) இப்பாடலில் இடம்பெறும் பழமொழி யாது?

iii) "பொழிந்தநெய் யாகுதி வாய்வழி பொங்கி
எழுந்த கொழுங்கனலென்ன எழுந்தார்"

அ) இத்தொடரால் யாருடைய செயல் குறிப்பிடப்படுகிறது.

ஆ) இங்கு வெளிப்படுத்தப்படும் உணர்ச்சி யாது?

iv) "ஓர் தட்டி லேபொன்னும் ஓர் தட்டி லேநெல்லும் ஒக்கவிற்கும்
கார்தட் டியபஞ்ச காலத்திலே தங்கள் காரியப்பர்.."

அ) "கார்தட் டிய பஞ்ச காலம்" எனக் குறிப்பிடுவதன் பொருள் யாது?

ஆ) இங்கு காரியப்பர் எனக் குறிப்பிடப்படுபவர் யார்?

v) ".. எனது ஒன்பது வயது மகன் மீன்குஞ்சு நீந்துவது போல உற்சாகமாக அதனோடு ஒட்டிப் பழகிவிட்டான். கணிப்பொறியை அவனுக்கு நிரம்பவும் பிடித்து விட்டது. அதுவும் அதன் இரகசியக் கதவைத் திறந்துவிட்டது"

அ) இதில் இடம்பெறும் அணியைக் குறிப்பிடுக.

ஆ) மகன் கணனியுடன் ஒட்டிப் போவதற்கான காரணம் யாது?

vi) "…. வேத மூன்றும் பலாவுள்ள நாடு….."

அ) இங்கு வேதம் மூன்றும் எனக் குறிப்பிடுபவை யாவை?

ஆ) இது யாரால் எழுதப்பட்டது?

vii) '….. ஏர் தழைக்க வேணும் தம்பிரானே…
எல்லோரும் வாழவேணும் தம்பிரானே"

அ) 'ஏர் தழைக்க வேணும்' என்பதன் பொருள் யாது?

ஆ) இப்பாடலடியில் இடம்பெறும் மனப்பாங்கு யாது?

viii) "…. படரெலாம் படைத்தாளைப் பழிவளரக்குஞ்
செவிலியைத்தன் பாழ்த்த பாவிக்…"

அ) இப்பாடல் யாரால் யாருக்குக் கூறப்பட்டது?

ஆ) இங்கு வாழ்ந்த பாவி எனக் குறிப்பிடப்படுபவள் யார்?



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

ix) 'கடலே இரையாதே காற்றே நீ வீசாதே
நிலவே எறியாதே - என்ர நீல வண்டு போய்ச் சேருமட்டும்.'

அ) இப்பாடல் யாரது கூற்றாக அமைந்துள்ளது?

ஆ) இயற்கையிடத்திலான முறையீட்டின் நோக்கம் யாது?

x) சங்கப்பால்களில் இடம் பெறும் குறுந்தொகை என்பது யாது? அதனை எழுதியவர் யார்? ( 20 புள்ளிகள்)

02. பின்வரும் செய்யுட் பகுதிகளையும் உரைநடைப் பகுதிகளையும் வாசித்து அவற்றின் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

i) தேம்படுபனையின் றிரள்பழத்தொருவிதை
வானுறவோங்கி வளம்பெ றவளரினும்
ஒருவற்கிருக்க நிழலாகாதே

தெள்ளிய வாலின் சிறுபழத்தொருவிதை
தெண்ணீர் கயத்துட் சிறுமீன் சினையிலும்
நுண்ணிதேயாயினும் அண்ணல் யானை
அணிதேர்புரவி யாட் பெரும்படையொடு
மன்னர்க்கிருக்க நிழலாகும்மே

அதனால்
பெரியோரெல்லாம் பெரியருமல்லர்
சிறியோரெல்லாம்
சிறியருமல்லர்

அ) பெரியோருக்கும் சிறியோருக்கும் கூறப்படும் உவமை யாது?

ஆ) "அணிதேர்புரவி யாட் பெரும்படையொடு
மன்னர்க்கிருக்க நிழலாகும்மே..." இத்தொடரில் பொருளை எழுதுக.

ii) விதியை நோவர், தம் நண்பரைத் தூற்றுவர்
வெகுளி பொங்கிப் பகைவரை நிந்திப்பர்
சதிகள் செய்வர், பொய்ச்சாத்திரம் பேசுவர்
சாதகங்கள் புரட்டுவர் பொய்மை சேர்
மதியி னிற்புலை நாத்திகங் கூறுவர்
மாய்ந்தி டாத நிறைந்த விருப்பமே
கதிகள் யாவும் தருமென லோர் ந்திடார்
கண்ணி லாதவர் போலர் திகைப்பர் காண்

அ) இப்பாடலில் கூறப்படும் செயற்பாட்டுக்குரியவர் யார்? அவர் செய்யும் செயற்பாடுகளுள் இரண்டைக் குறிப்பிடுக.

ஆ) நாத்திகம், ஓர்ந்திடார் ஆகிய சொற்களின் பொருளைக் குறிப்பிடுக.

iii) தச்சன் செய்த சிறுமா வையம்
ஊர்ந்து இன் புறாஅர் ஆயினும் கையின்
ஈர்த்துஇன் புறூஉம் இளையோர் போல
உற்றுஇன் புறோம் ஆயினும் நற்றேர்ப்
பொய்கை ஊரன் கேண்மை
செய்து இன் புற்றனெம் செறிந்தன வளையே

அ) தலைவியின் மனநிலைக்கு கூறப்படும் உவமை யாது?

ஆ) இப்பாடல் யாரால் யாருக்கு கூறப்பட்டது?



agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

iv) அருணந்தி சிவாசாரியார் ஒரு பெரிய மகான். அவருக்கு ஒருவகை வயிற்றுவலி இருந்தது. அவர் அந்த வலியை மாற்றாமல் தமது பிராரத்தம் என்று கருதி அதை அனுபவித்துக் கொண்டு வந்தார். மாணவர்களுக்குப் பாடஞ் சொல்கிறபோது மாத்திரம், அவர் தமது வலியை அங்கவஸ்திரத்தில் ஆவாகனம் பண்ணிப் பக்கத்தில் வைத்து விட்டு பாடஞ் சொல்வது வழக்கம். அந்த வஸ்திரமும் அதுவரைதுடிதுடித்துக் கொண்டிருக்கும். பாடஞ் சொன்ன பிறகு பழையபடி அந்த வலியை எடுத்து வயிற்றில் விட்டு விடுவார்.

அ) பிராரத்தம் என்பதன் பொருள் யாது?

ஆ) அங்கவஸ்திரத்தில், ஆவாகனம் பண்ணி வைத்தல் என்ற தொடரின் பொருள் யாது?

v) இந்த சினிமா மொழியை அதன் தன்மையை, தனித்துவத்தை உணர்ந்து ஒரு படைப்பாளி அதை அழுத்தமாகக் கையாளும் போது அங்கே சினிமா பிறக்கிறது. இந்த மொழியிலிருந்து மாறுபட்டு வாய்ப்பேச்சினால் கதை சொல்ல முற்பட்டால் அங்கே சினிமா நலிவடைகிறது. பேசும் மொழி போலவே இந்த மொழியின் நயம் அதைப் பயன்படுத்தும் படைப்பாளியின் திறனை, கற்பனை வளத்தைப் பொறுத்தது.

அ) சினிமா எப்படிப் பிறக்கிறது?

ஆ) சினிமா எதனால் நலிவடைகிறது? (20 புள்ளிகள்)

03. கம்பியூட்டர் என்ற சிறுகதையில்,

அ) கம்பியூட்டர் வாங்கியதிலிருந்து கம்பியூட்டருக்கும் கதாசிரியரின் குடும்பத்துக்கும் உள்ள தொடர்பை விபரிக்குக.

ஆ) ஆசிரியருக்கு கம்பியூட்டர் மீது ஏற்பட்ட வெறுப்பையும் அதனால் உண்டான குழப்ப நிலையையும் விளக்குக. (15 புள்ளிகள்)

**அல்லது**

பாரதியார் சுயசரிதை என்ற கவிதையை அடிப்படையாகக் கொண்டு,

அ) பாரதியாரின் பிள்ளைக் காதலை விபரிக்குக.

ஆ) ஒருவர் தாம் விரும்பும் நலனை அடைவதற்கு யாது செய்ய வேண்டும் எனக் குறிப்பிடுகின்றார்?(15 புள்ளிகள்)

04. திருக்குறளிலுள்ள பேதமை என்ற அதிகாரத்தில்,

அ) பேதையரின் இயல்புகளை விளக்குக.

ஆ) பேதையரை மதிப்பிடும் செயல்களாக எவ்றைக் குறிப்பிடலாம்? (15 புள்ளிகள்)

**அல்லது**

குற்றாலக் குறவஞ்சி என்ற பாடத்தில்,

அ) திரிகூட மலையின் சிறப்புக்களை விபரிக்குக. (10 புள்ளிகள்)

ஆ) குற்றால நாதரின் சிறப்புப் பெயர்கள் ஐந்தைக் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

♦ பின்வரும் **05, 06, 07** வினாக்களுள் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து விடை எழுதுக.

05. வாக்குண்டாம், திரிகடுகம் ஆகிய பாடல்களில் உள்ள நீதிக் கருத்தை விளக்குக. (10 புள்ளிகள்)

06. குகப்படலத்தில்,

அ) சுமித்திரையை அறிமுகப்படுத்தியதை விளக்குக.

ஆ) கோசலை ஐவருக்கும் கூறிய வாழ்த்துரையை விளக்குக. (10 புள்ளிகள்)

07. சங்கப் பாடலில் உள்ள புறநானூற்றுப் பாடலில் முதியவர்களின் கையறு நிலை எவ்வாறு அமைந்துள்ளது என்பதை விளக்குக. (10 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk